உ
சிவமயம்

gistered as a News paper in Ceylon
P. M. G. NO. H. A
69/300 of 1939.

# இந்துசாதனம்

உரோதி வருஷம்
(1889)
ஆவணிமாதம்
28-ந்உ ஆரம்பமானது

செவ்வாய் வெள்ளிதோறும் வெளிவருவது

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிளவேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே

புத். ருஅ] யாழ்ப்பாணம்— விய ஷு வைகாசிமீ கஉ (1946 மே 14 செவ்வாய்க்கிழமை) [இல கக


## சிங்களத்தலைவர்களின் ஒற்றுமைப்பல்லவி

### மிஸ்ரர் மொலமுரேயின் உபதேசம்! சமபலமின்றேல் சகோதரத்துவம்வருமா?

### சிங்களத்தலைவர்கள் செய்துள்ள நன்மைகள்!

(நமது அரசியல்நிருபர் எழுதுகிறார்)

மிஸ்ரர் மொலமுரே வந்தார்; மந்திரிமகாதேவாவின் விருந்தினராக இருந்தார்; மூன்று கூட்டங்களிற் பேசினார்; திரும்பித் தென் இலங்கைக்குச் சென்றுவிட்டார்; இவ்வளவுடன் அவர் தமது லட்சியத்தை நிறைவேற்றி விட்டதாகவும், செனநாயகாக் கட்சிக்குத் தமிழ் மக்களுடைய ஆதரவையும் ஒத்துழைப்பையும் தேடிவிட்டதாகவும் எண்ணுவாரானால், அது பகற் கனவன்றி வேறு ஒன்றும் அல்ல.

○

எங்களை நம்புங்கள்; நாங்கள் உங்களைக் கைவிடமாட்டோம் என்கிறார் மிஸ்ரர் மொலமுரே; எங்களுடன் ஒத்துழையுங்கள், எல்லோரும் சேர்ந்து இன்புற்றிருக்கச் சுயராச்சியம் பெறுவோம் என்று ஆசை காட்டுகிறார் அவர். எல்லாரும் ஓர் குலம்; எல்லாரும் ஓர் இனம்; எல்லோரும் ஓர் ஈழத்தாயின் மக்கள் என்கிறார் இந்தச் சிங்களத் தலைவர். ஆனால் இப்படியான சகோதர பாவனை, நேசபான்மை, சமத்துவ சிந்தை எல்லாம், சிங்களத் தலைவர் என்றிருப்போர்க்கு ஆனையிறவுக்கிப்பால் வந்தபின் உண்டாவதா அல்லது தென்னிலங்கையில் இருக்கும்போதும் இருக்கிறதா என்பதைச்சிங்களத் தலைவர் ஒவ்வொருவரும் தத்தம் மனச்சாட்சியைச் சோதித்துப் பார்த்து அறிதல் உசிதம்.

○

ஒத்துழைப்பு! ஒத்துழைப்பு! என்று பரக்கப்பேசும் மிஸ்ரர் மொலமுரேயிடம் தமிழ்மக்கள் கேட்க வேண்டியதொன்றுண்டு; ஒத்துழைப்பென்பது சமபலமுடைய இரு அல்லது அதற்கு மேற்பட்ட சாரார்க்கிடையே ஏற்படுவதொன்றொழிய பலமுடைய ஒருவனுக்கும் பலவீனன் ஒருவனுக்குமிடையே ஏற்படுவதில்லை; பரஸ்பரம், நல்லெண்ணம், நம்பிக்கை, விசுவாசம் என்பவற்றை ஆதாரமாகக்கொண்டதே ஒத்துழைப்பு ஆனல், ஆப்படியான பரஸ்பரம், நல்லெண்ணம், நம்பிக்கை, விசுவாசம் என்பன இன்று சிங்கள, தமிழ் மக்களுக்கிடையே உண்டா? இன்றேல், அதற்குக் காரணர் யார் என்று மிஸ்ரர் மொலமுரே பதில் கூறுவாரா? இலங்கையில் உள்ள சிறுபான்மையினர், சமபல பிரதிநிதித்துவம் கோருகிறார்கள். பெரும்பான்மைச் சமூகம் தம்மை நசுக்கிவிடுவார்களோ என்ற பயத்தினால், இப்படியாகச் சிறுபான்மையினர் கோரியது பிழையா? பலத்தில் ஜனத்தொகையிற் கூடிய சிங்களத் தலைவர்கள் சிறுபான்மையினரின் பயத்தைப் போக்குதற்காக வேனும் தாராள மனது கொண்டு நடந்தார்களா. பாரதகண்டத்தில் 28கோடிமக்களாகிய ஹிந்துக்கள் 10கோடி முஸ்லிம்களுக்குச்சமபிரதிநிதித்துவம்கொடுக்க முன்வருவதையாவது மிஸ்ரர் மொலமுறே அறியாரா?

○

காங்கேசன்துறையில் சீமெந்துத் தொழிற்சாலையை ஸ்தாபிக்கப்போகிறார்கள்: புத்தூரில் நிலாவரை நீர்வசதியைச்செய்துவிட்டார்கள்; அச்சுவேலியில் குடியேற்றத்திட்டம் போட்டிருக்கிறார்கள் என்று சிங்கள மந்திரிமார் ஆற்றிய விஷயங்களைச் சிலாகித்தார் ஸ்ரீமான் நடேசபிள்ளை சுன்னாகத்தில். பொரிமாவை மெச்சினாள் பொக்கைவாய்ச்சி: வவுனியாவுக்கப்பால், சிங்களநாடுகளில், சிங்கள மந்திரி சபையினர் தம் சொந்த மக்களுக்காகச் செய்த, செய்துவருகின்ற கைங்கரியங்களில் 1000 இல் ஒரு பங்குதானும் தமிழ்ப்பகுதிகளில் சிங்களமக்கள் செய்யவில்லையென்பதை ஸ்ரீமான் நடேசபிள்ளை உணருவாரா? மின்னேரியாவில் எத்தனை கோடி ரூபா? காகமத்தில் (கெக்கிராவைக் கப்பால்) நீர்ப்பாய்ச்சல்நில அபிவிருத்திக்கு எத்தனைகோடி ரூபா? எலாகரை, பக்கமுனை (நாவலைக்கப்பால்) எத்தனைகோடி ரூபா? தென்மாகா

தொடர்ச்சி 5-ம் பக்கம்

### அடிமை நாடுகளிற் பட்டினிக் கொடுமை

(6-ம் பக்கம்)

## பிரதிமைப் படத்தைக் கண்டதும் பிரேமையா?

### இந்திய நடனக்காரியும் நகரசபை அங்கத்தவரும்

வட இந்திய நாட்டிய நிபுணையான சந்திரலேகா என்னும் பெண்ணின் படத்தை டெகிவலை நகரசங்கத்துப் பிரதிநிதி ஒருவர் பார்த்துவிட்டார். படத்தின்மீது மோகம் கொண்டுவிட்டார், சென்ற வெள்ளிக்கிழமை டெகிவலைநகரசபைக் கூட்ட நிகழ்ச்சிகளில், ஓர் தெருவுக்குப் பேர் வைப்பது என்ற பிரச்னை வந்தபோது, குறித்த அங்கத்தவர் அந்தத் தெருவுக்குச் சந்திரலேகாத்தெரு என்று நாமம் சூட்ட வேண்டும் என்று வாதாடினார்.

நகரசபைத்தலைவர்: சந்திரலேகா என்பது ஓர் இந்திய நடனக்காரியின் பெயர் அல்லவோ?

அங்கத்தவர்: ஆம்

ந. ச. த: அப்படியானல் இந்தத் தெருவின் பெயருக்கு அவள் பெயரை இட்டு, அவளைக்கௌரவிப்பது தங்கள்நோக்கமா?

அங்கத்தவர்: இல்லை, எனக்கு அப்பெண்ணைத் தெரியாது, அவ்வாரணங்கின் பிரதிமைப்படம் ஒன்றை மாத்திரமே கண்டேன்.

ந. ச. த: படத்தைப் பார்த்ததும் காதல்கொண்டுவிட்டீரோ?

## மின்சார அதிகாரிக்கு லீவு

### வில்லூண்டியில் தீண்டாதார்க்கு மயானம்

### மந்திரிகளின் ஆலோசனைக் கெதிர்ப்பு

(நமது நிருபர்)

வில்லூண்டியில் இன்னோர் பொதுமயானம் ஏற்படுத்தி, அதில் தீண்டாதார் உட்படச் சகலரும் பிரேத தகனம் செய்ய வசதிகள் செய்யவேண்டும் என ஸ்தல ஸ்தாபன மந்திரியும், சுகாதார மந்திரியும் கூறிய யோசனைகள் சென்ற வெள்ளிக்கிழமை நிகழ்ந்த யாழ்ப்பாணம் நகாசபைக் கூட்டத்தில் சர்வாங்கீகாரமாக நிராகரிக்கப்பட்டன.

அராலிப்பாதையில் நகரசபைஎல்லைக்குள் ஓர் பொது மயானத்தை ஏற்படுத்தி, அதில் தீண்டாதார் பிரேததகனம் செய்ய விடலாம் என்றும், அதற்கான நிலங்களை வாங்குதற்கு 1000 ரூபா செலவிடலாம் என்றும் நகரசபை தீர்மானித்தது.

மின்சாரப்பகுதி அதிகாரியைப் பதவியினின்றும் விலக்கி, அவர்க்கு விடுமுறை கொடுக்கவும் நகரசபை தீர்மானித்தது. அதாவது, அவ்வதிகாரி முழுச்சம்பளத்தில் லீவு பெற்று, லீவுகாலத்துக்கிடையில் இன்னோர் உத்தியோகம் தேடவேண்டும்.

கூட்ட நடைவடிக்கைகள் முடியும்வரை நகர மண்டபத்தைச் சுற்றிப் பொலிசார் காவல் புரிந்தனர்.

## கந்தபுராணம்

(அகில இலங்கைச் சைவ மகாநாட்டில் பண்டிதை மா. அமிர்தாம்பிகையம்மாள் நிகழ்த்திய பேருரை)

(முற்றொடர்)

மேலும் ஆசாரிய சுவாமிகள் தாம் பாடும் கற்பனைவருணனைச் செய்யுட்களிற் பெரும்பான்மையும் பாகியார்த்தம் தத்துவார்த்தம் இரண்டும் செறிதரப் பாடுவர். இதற்கு ஒருதிருவிருத்தத்தை மட்டும் இங்கே எடுத்துக்காட்டுகிறேன். பெருமானர் திருமணக் கோலம் கொண்டு திருவீதியில் எழுந்தருளி வரும்போது, அவ்வீதி இருமருங்கிலும் உள்ள எழுவகைப் பருவமகளிரும் அவர் திருக்கோலத்திற் காதல்கொள்கின்றார். சில பெண்களின் செயல் பின் வருமாறு கூறப்பட்டுள்ளது,

“வாசம் வீழ்தலும் வந்துவந்து
இல்லிடை
தூசுடுத்திலம் என்றோர் துகில்
புனைந்து
ஆசையோடு சென்று அன்னதும்
விட்டியே
ஊசல் போன்றனர் ஒண்டொடி
மார்சிலர்;”

இங்கே ‘வாசம்’ என்பது அணிந்துள்ள உடை அல்லது வஸ்திரம். ஒண்டொடிமார் சிலர் என்பது இருவினையொப்புமலபரிபாகத்திற்குச் சமீபமான உயிர்கள் எனவே உடை என்பது திரோதான சக்தி. இறைவனைத் தரிசிக்க வேண்டும் என்று ஆசைகொண்டு ஓடிச்சென்று தரிசித்த மாத்திரத்தே, அத்திரோதான சத்தியின் தடிப்பு அகன்றுவிட, ஆன்மா தன்னை உள்ளபடி காண்கின்றது. ஆனல் பூரணமான பரிபக்குவ நிலை இன்மையால் பிரபஞ்சவாசனையும் உயிரிடத்தில் தட்டுகின்றது. தட்டியவுடனே தான் நிர்வாணி என நினைத்துத் திரோதான சத்தியாகிய உடையால் தன்னை மூட விரும்பிப் பிரபஞ்சத்தை மீள அவாவுகின்றது. இறைவனுடைய தரிசனத்தால், அவனுடைய திருவருள் கைகூட அத்திரோதான சத்தியின்முனைப்பு நீங்க, உயிர்தன்னைஉள்ளவாறுஉணரும். இ

தொடர்ச்சி 6ம் பக்கம்

## அரிசிவிலை அதிகரிக்குமா?

### உணவுப்பொருள் விற்பனையால் நட்டமாம்!

### ஒரு ருத்தல் சீனியில் 18 சத இலாபம்

உணவுப் பொருள்களை வரவழைத்து விநியோகம் செய்யும் வகையில் அரசாங்கத்துக்கு மாதந்தோறும் 55 லட்சம் ரூபா நட்டம் ஏற்படுகிறதாம்.

மா விற்பனையினுல் மாத்திரம் 15 லட்சம் ரூபாய் அரசினர்க்கு மாதந்தோறும் நட்டம் ஏற்படுகிறது. சீனி விற்பனை ஒன்றினுல் மாத்திரமே ஆதாயம் உண்டு மாதந்தோறும் இலங்கையில் 6700 தொன் சீனி விற்கப்படுகிறது. ஒரு இருத்தல் சீனி விற்பனையில் சராசரியாக 18 சதம் அரசாங்கத்துக்கு இலாபம்கிடைக்கிறதாம்.

உணவுப்பொருள் விற்பனையினுல் ஏற்படும் நட்டத்தைச் சமாளிப்பதற்காக அப்பொருள்களின் விலையை ஓரளவுக்கு அதிகரிக்கும் எண்ணம் அதிகாரிகளுக்கிடையே இருந்து வருகிறது உதாரணமாக ஒருபடி அரிசிமீது 10 சதத்தை அதிகரிக்கலாம் என்றும், அப்படியான அதிகரிப்பினுல் ஏழை மக்கள் பாதிக்கப்படமாட்டார்கள் என்றும், உணவுப்பகுதியின் உயர் [illegible]

### ‘கள்வரின் ஒதுக்கிடம்’

### அரசாங்கசபையைப் பற்றி அங்கத்தவர் கருத்து

போலிசாரின் அறிக்கை

கொழும்புத் துறைமுகத்துத் தொழிலாளர் வேலை நிறுத்தத்தின்போது கொழும்பில் ஓர் மகா கூட்டம் நிகழ்ந்தது, அதிற் பேசிய ஒரு அரசாங்கசபைப் பிரதிநிதி, அரசாங்கசபையைப் பற்றிக் குறிப்பிடும்போது “அது கள்வரின் ஒதுக்கிடம்” என்று கூறினார்.

குறித்த கூட்டத்து நடைவடிக்கைகளையும், ஷை பிரதிநிதியின் பேச்சுக் குறிப்புக்களையும் பொலிசார், போக்குவரத்துப் பகுதி மந்திரிக்கு அனுப்பினர் மந்திரி அவற்றை அரசாங்கசபைத் தலைவர்க்கு அனுப்பியிருக்கிறார். குறித்த அங்கத்தவர் மீது அரசாங்கசபைத் தலைவர் ஒழுங்கு [illegible] எடுப்பார் எனக் கருதப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாம்அர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம், வியஸ்ரீ
வைகாசிமீ கஉ செவ்வாய்க்கிழமை

## யாழ்ப்பாணத்திற் கல்வி குன்றுகின்றதா?

III

தமிழ் பயிற்றும் ஆசிரியர்களாக, ஆங்கிலம் பயிற்றும் ஆசிரியர்களாக, வேறு எப்பாஷையைப் பயிற்றும் ஆசிரியர்களாக அவர்களெவ்வொருவரும் குலன், அருள், தெய்வங்கொள்கை முதலாம், பழைய ஆசானுக்குச் சொல்லப்பட்ட குணங்களுஞ் செயல்களும் பூண்டவர்களாயிருத்தல் வேண்டும். பயிற்றப்பட்ட ஆசிரியராக, தராதரப் பத்திரம் பெற்ற ஆசிரியராக, உயர்தரக் கல்வியில் விசேஷசித்தி படைத்த உபாத்தியாயராக, கல்வியோடு அநுபவம் வாய்ந்தவராக, வேறு எப்படிப்பட்ட சுகுணங்கள் நற்செயல்களோடு கூடியவராக, அவரிடத்தில் தெய்வ நம்பிக்கை கொள்கை வழிபாடு ஒழுக்கமென்னுமிவைக ளில்லையானல், அவர் உபாத்தியாயரா யிருத்தற்கு ஒருபோதும் உதவ மாட்டாரென்று தீர்க்கமாகச் சொல்லலாகும். தெய்வத்தில் நம்பிக்கையற்ற ஆசான் சமய நூல்களிலும் சமயத்திலும் சமயகுருவிலும் பெரியாரிலும் நம்பிக்கை யற்றவனுவான்; பெரியார் வாக்கினையும் பெரியார் செய்த பெரிய நூல்களையும் நம்பாதொழிவன்; காலகதியில் தம் பெற்றூர் உற்றூர் அயலார் மனைவி மக்கள் முதலிய எவரிடத்தும் நம்பிக்கையற்றவனுகி இறுதியில் தன்னைத்தானே நம்பாதொழிவான்; அப்படிப்பட்டஆசான் 'அந்தரத்தாமரை' போல ஆதாரமற்று இம்மை மறுமையிலும் நம்பிக்கையற்றுச் சஞ்சலத்தோடு மாண்டொழிவான்; தெய்வம் முதலாக எவரிடத்தும் நம்பிக்கையற்றவனுகிய ஆசானைத் தெய்வமும் கைவிட, உற்றூர் அயலார் பெற்றூர் பெண்டிர் பிள்ளைகள் எவரும் நம்பிக்கையற்றுக் கைவிடுவரென்பதும் நிசம்; ஆனதால் ஆசானுயுள்ளவன் தெய்வங் கொள்கை பூண்டவனுய் ஒழுக்கமுடையனுயிருத்தல் வேண்டும்; இதுபற்றியே

"கற்றதனு லாயபய னென்கொல் வாலறி
நற்றூள் தொழாஅ ரெனின்" [வன்

என்ற பொய்யா மொழியார் வாக்குப் பிறந்தது; தெய்வத்தில் நம்பிக்கை யுண்டாகவே அந்த ஆசானிடத்தில் ஏனைய சுகுணங்களும் ஒழுக்கங்களும் ஒன்றூயும் பலவாயுந் தாமே வந்து அமையும். உபாத்தியாயர் கற்றவராயும் கற்றபடி யொழுகுபவராயுமிருந்தாலே, மாணுக்கரும் கல்வியொழுக்கம் முதலிய நன்மைகளில் விருத்தியடைந்துவருவர்; ஆசிரியர் ஐங்குரவருளொருவரென்பதைத் தாம் ஒருபோதும் மறந்துவிட வொண்ணுது.

மேலே சொல்லப்பட்ட குணங்களோடுஞ் செயல்களோடும் ஒழுகுவரேல், அந்த ஆசிரியர் மாணுக்கர்களால் மாத்திரமல்லர் பெற்றூர் முதலிய எல்லாராலும் "எழுத்தறிவித்தவன் இறைவனுவன்" என மதித்துப் போற்றப்படுவர்; ஆசிரியரா யுள்ளவரிடத்தில் இருக்கவேண்டிய பிரதான குணம் சுவதந்திரமுடைமையாகும்; எவ்வளவு படித்தவராயிருந்தாலும், மனத் தூய்மையும் சுவாதீனமும் ஆசிரியரிடத்தில் ஒருங்கமையுமாயின் அவர் நிலைமை பொன்மலர் நாற்றமுடைத்தெனப் பாராட்டத்தக்கதாம். ஆனல் இக்காலத்தில் ஆசிரியர்களிடத்துச் சுயாதீனமென்பது அறவே இல்லையாகுமெனத் திடமாகச் சொல்லலாம்

இக்காலத்து உபாத்தியாயர்கள் வித்தியாபகுதியாரின் பல நிபந்தனைகட்குக் கட்டுப்பட்டவர்களா யிருப்பதோடமையாது, வித்தியாசாலைகளை வைத்துநடத்தும் அதிகாரிகளுக்குங் கட்டுப்படவேண்டியவர்களாயினர்; இப்படியான வித்தியாசாலையதிகாரிகளுட் சிலர், படித்தவர்களும் விவேகிகளுமாக, பலர் மௌட்டிகம் பொருளாசை முதலாந் தீமைகளோடு கூடியவர்களாவர்; தங்களைக்காட்டிலும் கல்வியறிவான் மிக்க ஆசிரியர்களை இந்த மௌட்டிகம் பூண்ட அதிகாரிகள் அடிமைபோல்வைத்து அடக்கி யாளவும் முயல்கின்றனர். தங்கள் வித்தியாசாலைகளிற் கல்விபயிற்றும் உபாத்தியாயர்களிடம் மாசவீதம் ஏதும் பணம் வாங்கிச் சீவிப்பாருஞ் சிலர் வித்தியாசாலைகளின் அதிகாரிகளென்றிருக்கிறூர்களாமே? இப்படிப்பட்டவர்கள் அதிகாரிகளாய் நடத்தும் பள்ளிக்கூடத்தின் கல்வி விருத்தி யெங்ஙனமாமோ யாம் அறியேம்; இவர்களுடைய துர் ஆசைக்கு இடங்கொடுத்துச் சுயமரியாதையையுங் கெடுத்து, வயிறுவளர்க்கும் உபாத்தியாயர்கள் தங்கள் பேடித்தனமான செயலால், தம்மோடொத்த ஏனைய உபாத்தியாயர்களுக்கும் அவமானத்தைத் தேடிவிடுகின்றூர்களல்லவா? இப்படிப்பட்டவர்களைத்தான் குலத்தைக் கெடுக்கவந்த கோடரிக்காம்பென்பர்;அறிவை அறியாமை அடக்கியாளத்தலைப்படுமானல் இந் நாட்டிலே வித்தை தலையோங்குதற்கு எவ்வகையான இடமும் உண்டா? இல்லையே. உபாத்தியாயர்கள் தங்கள் பழைய கொள்கைகளையும் பெருந் தன்மையையும் பொதுநல சேவையையும் சுயாதீனத்தையும் பெற்றூலொழிய இந்நாடு கல்வி விருத்தி விஷயத்தில் அதிக நன்மை யடையுமென நாம் காத்திருத்தற்கு இடமில்லையாம். கல்வி விஷயமாக இங்கே செய்யவேண்டிய திருத்தங்கள் பலவுண்டு

## பரமேசுவரக் கல்லூரி வெள்ளிவிழா

இலங்கை முழுவதிலும் சிறந்த வித்தியா தாபனங்களு ளொன்ருக விளங்கும் யாழ்ப்பாணம் பரமேசுவரக் கல்லூரியின் இருபத்தைந்தாம் ஆண்டுப் பூர்த்தியை உத்தேசித்தே இன்று (14-5-46) தொடக்கம் "கார்னிவல்" எனப்படும் பலவகைக் கொண்டாட்டக் காட்சிகளும் விளையாட்டுக்களும் ஒருவாரகாலம் நடைபெறும்: இவ்வெள்ளிவிழாக் கொண்டாட்டத்தைப் பூரணமான அநுகூலமுறச் செய்தற்கு ஆகவேண்டிய முயற்சிகளனைத்தும் மேற்படி கல்லூரியதிகாரிகள், ஆசிரியர்கள், பழைய மாணவர், அபிமானிகளென்னு மிவர்களாற் செய்யப்படலாயின; சுன்னுகம் இராமநாதன் கல்லூரியாசிரியர்கள் பழைய மாணவர் அபிமானிகளாதியோரும் இவ்விழாக் கொண்டாட்டத்திற் சேர்ந்து மனப்பூர்வமாக உழைக்கிறூர்களென அறியலானேம்: இவற்றையெல்லாம் உத்தேசிக்கும்போது, குறித்த கல்லூரிப் பெருவிழா பூரண அநுகூலமுறுமென்பதிற் சந்தேகமில்லையாம்.

சங்கமாகவேனும் சபையாகவேனும் பலர் சேர்ந்து பல வருடங்களாக முயற்சி செய்து தாபித்து நடத்தவேண்டிய வித்தியா தாபனங்களாகிய இராமநாதன் கல்லூரியையும் இப்பரமேசுவரக்கல்லூரியையும் இலங்கைப் பெரியாராகிய ஸேர் பொன் இராமநாதனவர்கள் சில வருட காலத்தில் தமது சொந்தப் பொருள் கொண்டே தாபித்து நடைபெறச் செய்தார்; தாபனங்களிரண்டும் இலங்கையில் ஒப்புயர்வற்றன வெனல் மிகையாகாது இப்படியான தாபனங்களைத் தென்னிந்தியாவிலுள்ள இராசா அண்ணுமலைச் செட்டியார் போன்ற வள்ளல்கள் செய்து நிறைவேற்றல் இயலுமேயொழிய இந்த இலங்கையில் வேறெவருஞ் செய்து நிறைவேற்றல் இயலாதெனலாம். பரமேசுவரக் கல்லூரி யெனிலோ வடஇலங்கையிலே வேண்டிய காலத்து ஒரு சர்வகலாசாலைக்குரிய கல்லூரியாக வைத்து நடத்துதற்காகிய போதிய அமைவுகளோடு பொருந்தியுள்ளது; அப்படியே பெண்பாலார்க்குக் கல்வியூட்டும் விஷயத்திலே இராமநாதன் கல்லூரியும் அமைந்துளது; இப்பொழுது இவ்வெள்ளி விழாக் கொண்டாட்ட காலத்திற் சேரும் பணம் முழுவதும் இக்கல்லூரியின் வித்தியா விருத்தியை உத்தேசித்தே செலவிடப்படுமாதலால், வித்தை விரும்பும் அபிமானிகளனைவரும் இச் சிறந்த கொண்டாட்டத்திற் பங்குபற்றித் தம்மாலியன்ற பொருளையுதவி இவ்விழாவைப் பூரண அநுகூலமுறச் செய்வாராக. தானங்களெல்லாவற்றுள்ளும் வித்தியா தானமே சிறந்ததென்பதை எவரும் மறந்துவிடவொண்ணுது.

## விசேஷ அறிவித்தல்

யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையார் சென்ற ஞாயிற்றுக்கிழமை (12-5-46) கூடிய நிருவாகசபைக் கூட்டத்தில், சைவப்பிரகாச யந்திரசாலை இந்துசாதனப் பிரசுரங்களென்னும் இவற்றின் மனேஜராக இதுகாறும் கடமை பார்த்து வந்தவராகிய திரு.S.பொன்னுசுவாமியவர்கட்குத் தேகநலக் குறைவு காரணமாக ஒருமாசகாலம் விடுதலையுதவி, அவருக்குப் பிரதியாக வண்மேற்கு திரு. அ. கநகசபாபதியவர்களை மேற்படி தாபனங்களின் மனேஜராக நியமித்துள்ளனர்.

மூ. மயில்வாகனம்,
யாழ்ப்பாணம், காரியதரிசி,
சைவபரிபாலனசபை,
13-5 46

# இந்திய அரசியல்

### தற்காலிக அரசாங்கஸ் ஸ்தாபிதம்

முஸ்லிம்லீக், காங்கிரஸ், பிரிட்டிஷ் மந்திரிகள் என்னும் முப்பகுதியினர்க்கும் இடையில் நிகழும் ஆலோசனைகளின் பயனுக இன்னும் ஸ்திரமான ஓர் முடிவும் ஏற்படவில்லை. ஆனல் பல்வேறு விதமான வதந்திகள் உலவுகின்றன. ஆனல் ஒன்றையேனும் உண்மையென்று நம்புவதற்கில்லை இதற்கிடையில் இப்போது இராஜப் பிரதிநிதியின் ஆலோசனைச் சபையில் அங்கத்துவம் வகித்து வருபவர்கள். தங்கள் பதவிகளை இம்மாதம் முடிந்ததும் - அல்லது அவசியம் நேரின் அதற்குமுன்னர் - விட்டு விலகத் தயார்படுத்தி வருவதாக ஓர் செய்தி கூறுகிறது. அது உண்மையானல், இடைக்காலத்தில், பொதுஜனங்களின் நம்பிக்கைக்குப்பாத்திரமான ஓர் மத்திய அரசாங்கத்தை அமைப்பது என்ற முயற்சி கைகூடவும் இயலும். முதலில் மத்திய அரசாங்கத்தை அமைத்து அதன்பின்னரே ஏனைய பிரச்சினைகளை ஆராயவேண்டும் எனக் காங்கிரஸ் வாதிட்டு வருவதும் ஈண்டுக் குறிப்பிடத்தக்கதாம்.

●

### லீக் — காங்கிரஸ் சமரசம் இல்லை?

இந்தியாவில் உள்ள சகல அரசியற் கட்சிகளும் ஒற்றுமைபூண்டு ஓர் அரசியற் றிட்டத்தை வகுத்தால் தம் வேலை சுலபமாகிவிடும் என்ற கருத்துடன் மந்திரிசபைத் தூதுக் கோஷ்டியினர் அப்படியான ஓர் சமரசத்தைஏற்படுத்துவதில்தம்மாலான முயற்சிகளைச் செய்தனர். தலைவர்கள் நேருக்குநேர் பேசி ஓர் முடிவுக்கு வருதல் வேண்டும் என்று அவர்கள், மிஸ்ரர் ஜின்னுவுக்கும் பண்டிதர் நேருவுக்குமிடையே ஓர் சந்திப்பையும் ஏற்படுத்தினர். இரு தலைவர்களும் பேசினர். ஆனல் சமரசம் ஏற்படவில்லை என்று பிந்திக் கிடைத்த தந்திச் செய்தி ஒன்று கூறுகிறது. மிஸ்ரர் ஜின்னு எது எப்படியிருந்தபோதிலும் பாகிஸ்தானைப் பெற்றேதீரவேண்டும் என்றுசாதித்தபடியினுலேயே இருதலைவர்க்குமிடையேநிகழ்ந்தபேச்சு வார்த்தைகள்முறிந்துவிட்டன என்று யூகிக்கப்படுகிறது.

●

### பரஸ்பர சமரசம் ஏற்படாவிட்டால்?

இந்திய அரசியற் கட்சிகளுக்கிடையே பரஸ்பரம் சமரசம் ஏற்படாவிட்டால் நடக்கப்போவது என்ன? "எங்களால் ஒன்றும் செய்யமுடியாது" என்று பிரிட்டிஷ் மந்திரிசபை கையை விரிக்கப்போகிறதா? அப்படியானல் அதாவது மிஸ்ரர் ஜின்னு போடும் முட்டுக்கட்டையினல், இந்திய சுதந்திரம் தடைப்படுவதா? ஜின்னுவின் சுபாவம் ஏற்கெனவே பிரிட்டிஷ் அரசினர்க்குத் தெரியாமல் இல்லை. எனவே, இதனைச்சாட்டாக வைத்து ஒன்றும் செய்யாமல் விடுவதாயின், பிரிட்டிஷ் மந்திரிகள் இவ்வளவு தூரம் வந்திருக்கவேண்டியதில்லை பெரும்பான்மையினரின் முன்னேற்றத்துக்குத் தடையாக, சிறுபான்மையினர் முட்டுக்கட்டை போட்டால் அதனைப் பொருட்படுத்தாது, இந்தியாவைச் சுதந்திரப் பாதையிற் செல்லவிடுவோம் என்று பிரதம மந்திரி மிஸ்ரர் அட்லி பாராளுமன்றத்திற் கூறியதும் ஈண்டுக் குறிப்பிடத்தக்கது. ஆகவே, மிஸ்ரர் ஜின்னுவின் பிடிவாதத்துக்கு இடங்கொடுக்காமல், முதலில் ஓர்

தொடர்ச்சி 5ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீவுப்பகுதிகளில் புகையிலைத் தொழில்

## அருகிவரக் காரணமென்ன? அதனைத் தடுக்க மந்திரி முன்வருவாரா?

—●—

### தென் இலங்கை ஐக்கிய சங்கத்தின் சேவை

—(:—:)—

(“விவசாயி” எழுதுவது)

எம்நாட்டுப்பிரதானமானதும், புராதனமானதுமானதொழில்களில்புகையிலைச்செய்கையுமொன்று. ஓர்காலத்தில் சிறப்பும் உற்ற யாழ்ப்பாணத்தின் பொருளாதார நிலைக்குக் காரணமாயிருந்த இத்தொழில் இன்று அருகி மிகக் கேவல நிலையில் இருப்பது எவரும் மறுக்கொணா உண்மை.

யாழ்ப்பாணத்தின் மற்றும்இடங்களைப்போலவே, தீவுப்பகுதிகளிலும் புகையிலைச் செய்கை மிகவும் அபிவிருத்தி யடைந்துள்ளது எனினும், அதனால் வரும் ஊதியம் அற்பமாகும். இந்த ஆண்டில் கொள்வார் இல்லாமையாற் பெருந்தொகை புகையிலை செய்கைக்காரரிடம் மாதக்கணக்கிற் கிடக்கின்றது. இப்படியே இன்னும் கிடக்குமாயின், புகையிலையின் மணமும் குணமும் கெட்டு ஈற்றில் அது புகையிலைச் செய்கையாளர்க்குப் பெரும் நட்டத்தைத்தரவதாகும்.

தீவுப்பகுதிப் புகையிலைச் செய்கையாளரின் நன்மையின் பொருட்டு 1941-ம் ஆண்டில தென் இலங்கை ஐக்கிய சங்கம் ஸ்தாபிக்கப்பட்டது. இச்சங்கம் இதுவரையும் மகத்தான வேலைகள் செய்து இவ்வாண்டில் வாளா கிடக்கின்றது. இதற்குக் காரணம் புகையிலையின் விலை வீழ்ச்சியேயாகும்.

தனது அங்கத்தவர்களிடமிருந்து புகையிலையை வாங்குதல்; வாங்கிய புகையிலைக்கு முற்பணமாக ஓர் தொகைப் பணத்தைக் கொடுத்து உதவல், என்பனதென இலங்கைஐக்கிய சங்கத்தின தொழில்களாகும். இப்படியாக வாங்கினபுகையிலையைதினிசு தினிசாகப் பாகுபடுத்தி, தனது கிட்டங்கிகளில் பாடம்பண்ணி விற்பனை செய்வது. புகையிலை வியாபாரிகள், தமக்கு வேண்டிய ரகமான புகையிலையைச் சங்கத்திடம பெற்ம, மப்புகணை, பொலகாவலை, அவிசாவலை, அரவன்வலை, கொழும்பு, தொனியகலை முதலாம் இடங்களுக்கு அனுப்பி விற்பனை செய்வர்.

தென் இலங்கை ஐக்கியசங்கத்தின் நடவடிக்கைகளையும் கணக்குகளையும் காலந்தோறும், ஐக்கியசங்க உத்தியோகத்தர் நுட்ப நுட்பமாக மேற்பார்வை செய்துவருகின்றனர்.

தீவப்பகுதிகளில் விளையும் புகையிலை தீனுக்கு உபயோகிக்கப்படுவது. இவ்வாண்டில் அதன் வியாபாரம் மிகவும் குறைந்திருக்கிறது. எனவே, இப்புகையிலையை விற்பதற்குத்தென் இலங்கை ஒழிந்த வேறுநாடுகளிலும் நரம்வியாபாரஸ்தலங்களை ஏற்படுத்தாவிட்டால், இன்னும் சில காலத்தில் இத்தொழில் அழிந்து ஒழிந்துவிடவுங்கூடும். அது மாத்திரமன்றி அந்திய நாட்டினரின் உபயோகத்துக்கு உவப்ப, புகையிலையைப் புதுமாதிரி உலர்த்தவும் பதப்படுத்தவும நவீன முறைகளை நாம கையாடவேண்டும். இவற்றையெல்லாம் செய்வதற்கு அரசாங்கத்தாரின் உதவியும ஒத்துழைப்பும் இன்றியமையாதது.

1943ம் ஆண்டில் குறித்த தென் இலங்கை ஐக்கியசங்கம் தனது அங்கத்தவர்களுக்கு அதிக விகிதமான ஆதாயத்தைக் கொடுக்கமுடிந்தது. 1944ம ஆண்டுப் புகையிலை குணத்தாற் சிறந்திருப்பினும், முந்தியிலும் பார்க்க இரட்டிப்பான தொகையாயிருந்தும் முழுக் கையிருப்பையும் விற்க இன்னும் முடியவில்லை. அத்துடன் மிகக் குறைந்த ஆதாயந்தான் கிடைக்குமெனவும் எதிர் பார்க்கப்படுகிறது. 1945ம் ஆண்டுக்குரிய புகையிலையைச் சங்கம் இம்முறை எடுக்கவில்லை. புதுப் புகையிலையின் விளைவு செலவு குறித்த ஆண்டில அபரிமிதமாக உயர்ந்துவிட்டது. எனவே, அந்தப் புகையிலையை விலை குறைத்து விற்கவும் முடியாததாகவிருக்கிறது. இந்த நிலைமை இன்னும் சில காலத்துக்குத் தொடர்ந்து நீடிக்குமானால் புகையிலைத் தொழில் அழிந்து ஒழிந்துவிடுமோ எனறு அஞ்சவேண்டியிருக்கிறது.

இப்போது தொழில் மந்திரிசபைக்குச் சமர்ப்பிக்கவேண்டிய விண்ணப்பம் ஒன்றுளது. இந்தத்தென்னிலங்கை ஐக்கியசங்கத்தை ஐக்கிய நாணய சங்கப் பதிவுக் காரியஸ்தர் மூலமாகவும் புகையிலைத் தொழில் விருத்திக்கென நியமிக்கப்பட்டிருக்கும் உத்தியோகத்தர் மூலமாகவும், ஓர் ஸ்திரமான நிலைக்குக் கொண்டுவருதல்வேண்டும்; அதுவுமன்றி, இங்கே விளையும் புகையிலையை ஐக்கியசங்கங்கள் மூலமாக, பலவேறு இடங்களில விற்பனையாக்க முயற்சிகள் செய்யவேண்டும்; அப்படிச் செய்தால் தீவுப்பகுதியில உள்ள புகையிலை விவசாயிகள் சபீட்சமடைவர்; தொழில மந்திரி இதனைச் சிந்தித்து ஏற்பாடு செய்வாரா?

---

## ஒன்றரைப்படி அரிசி

——

### ஆனல் மாவின் அளவு குறைபடும்

——

இந்த மேமீ 27ம் திகதி தொடக்கமாக அரிசிப் பங்கீட்டளவு அதிகரிக்கப்படவிருக்கிறது. இப்போது வயது வந்தவர்கள் எல்லாரும் வாரத்துக்கு ஒருபடி அரிசி பெற்று வருகிறார்கள், புதிய ஏற்பாட்டின்படி இவர்கள் ஒன்றரைப்படி அரிசி பெறுவார்கள். தொழிலாளர்களுக்கும் இதே அளவு அரிசிதான் கொடுக்கப்படும்.

அதிகரிக்கப்படும் அரிசிக்குத் தகுந்தமாதிரி கோதுமை மா என்பவற்றின் அளவு குறைக்கப்படும்.

---

## திருச்சி ரேடியோ

புதன் மே 15

காலை: 7-15 கிதாரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7-30 திருப்பூந்துருத்தி ஆர் விச்வநாதய்யர் பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8-15 சுத்தானாதபாதி பாடல்கள் இசைத்தட்டு 8-20 ஸி ஆர் அனந்த பாகவதர் பாட்டு 9 முடிவு.

1 ஆரம்பம் 1.30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 ஜி ஆர் அனந்தபாகவதர்பாட்டு 2 தமிழில் செய்திகள் 2 05 கோடைக் கல்வி 2-30 முடிவு.

மாலை: 5 திருவாலங்காடு என் சுந்தரேசய்யர் வயலின் 5-40 தேவாராதனை 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6-10 அறிவிப்புகள் வானிலை 6.15 சித்ரகானம் 6.45 கிராம நிகழ்ச்சிகள் 7-15 வானொலி வாயகோஷ்டி 7.30 தமிழில் செய்திகள் 7-45 புத்தக விமர்சனம் 8 திருவாலங்காடு என் சுந்தரேச ஐயர் வயலின் 8.30 திருப்பூந்துருத்தி ஆர் விச்வநாதய்யர் பாட்டு 9 ஆங்கிலப் பேச்சு 9-15 ஆங்கிலத்தில செய்திகள் 9.30 லண்டனிலிருந்து செய்திகள் 9.40 அறிவிப்புகள் வானிலை 9.45 ஐரோப்பிய சங்கீதம் 10.30 முடிவு.

---

# நக்கீரர் திருவிளக்கு

(சோம சரவணபவன்)

காண்டற்குரிய பொருளைக் காணவொட்டாமல் மறைத்துக் கவிந்திருக்கும் இருளை ஒளிகொண்டோட்டிப் பொருள்களின் உருவம் காட்டுகின்றதே தீபம் எற்றினார் பெரியோர்பலர். அவருளொருவர் கடைச்சங்கத்துத் தலைமைப் புலவர் நக்கீரதேவர். அவர் தாமேற்றிய தீபம் இதுவென்பதையும், அதையேற்றுதற்குத் தாம் உபயோகித்த உபகரணங்கள் இவையென்பதையும், “கைலைபாதி காளத்திபாதி யந்தாதி” என்ற பிரபந்தத்திலே முதற் செய்யுளிலே கீழ்க்கண்டவாறு கூறுகின்றார்.

‘சொல்லும் பொருளுமே
தூத்திரியும் நெய்யுமா
நல்லிடிஞ்சில் என்னுடைய
நாவாகச்—சொலலரிய
வெண்பா விளக்கா
வியன்கயிலை மேலிருந்த
பெண்பாகர்க் கேற்றினேன்
பெறறு.’’

நாற்பாக்களாய்க் கதிரெறிந்து பிரகாசிக்கிற இத்தீப வெளிச்சத்திலே தோன்றும பொருளொவ்வொன்றும் இன்பமே பயக்கும. அவையெல்லாவற்றையும் உற்றுநோக்கி யறிந்தின்புறும் ஆற்றலில்லாச் சிறியேன் நாலாயத் தோன்றும் அவற்றுளாயினும் இரண்டொன்றைப் பார்ப்போமென்னும் ஆசை மிகுதியினாலே முற்பட்டுச் செல்கின்றேன். முன்னவன் துணைபுரிக.

“கயிலைமே லிருந்தபெண் பாகர்க் கேற்றின” விளக்கெனவே கயிலையையும் பெண்பாகரையும் பார்க்க ஆசையுண்டாகின்றது. அந்த ஆசையை நக்கீரதேவரும்,

“கழிந்த கழிகிலாய்
நெஞ்சே கழியா
தொழிந்தகாள் மேற்பட்
டுயர்ந்தோர்—மொழிந்தசீர்க்
கண்ணுதலான் எந்தை
கயிலாய மால்வரையை
நண்ணுதலாம் நன்மை
நமக்கு’’ என்றும்,

“அடைந்துய்ம்மின் அம்மானை
உம்ஆவி தன்னைக்
குடைந்துண்ண எண்ணிய
வெங்கூற்றம்—கடைந்துநுங்
கண்ணுளே பார்க்கும்
பொழுது கயிலாயத்
தண்ணலே கண்டீர்
அரண்.’’ என்றும,

உறுதிமொழி கூறி,

‘கதையிலே செளீர்
கயிலாய கோக்சிப்
புதையிருட்கண் மாலோடும்
போலயச்—சிசையாச்சீர்த்
தீர்த்தன்பாற் பாசுபதம்
பெற்றச் செருக்களத்திற்
பார்த்தன்போர் வென்றிலனே
பண்டு’’ என்றும்,

“செய்த சிறப்பெண்ணில்
எங்குலக்குஞ் சென்றடைந்து
கைதொழுவார்க் கெதை
கயிலாயர்—கொய்தளிற்
காற்காய்ந் தாரன்றே
காணீர் கழலதொழுத
பாலகா யன்று
பரிந்து.’’

என்றும் உதாரணங்கள் காட்டித் தூண்டுகின்றார். மேலே செல்வோம்.

செல்வது சுலபமாகும் பொருட்டு உபாயங்கள் சிலவற்றையும் தேவரே எங்களுக்குச் சொல்லித்தருகின்றார். முதலிலே நாங்கள் எங்களை அங்கே செல்வதற்குத் தகுந்த யோக்கியராய்ச் சித்தமபண்ணல் வேண்டும். யானெனும் அகந்தையைக் களைதல் வேண்டும, அகந்தையொடு சென்றுவிடில்,

‘வந்தோர் அரக்கனைல்
வண்கயிலை மால்வரையைத்
தந்தோள் வலியினலே
தாங்காது—அந்தோ
இடர்தார் இடந்திட்
டடார்க்கீழ் எலிபோற்
கிடந்தார் வலிமெலாங்
கெட்டு’’

என்னும் வெண்பா உணர்த்துகின்றது.

“சென்றிறைஞ்சும் வானோர்தஞ்
சிந்தைக்குஞ் சேயராய்
என்றும் அடியார்க்கு
முன்னிற்பர்—நன்று
கனியவருஞ் சோலைக்
கயிலாய மேயார்
இனியவர் பத்தர்க்
கிவர்’’

எனறு சொல்லப்படுதலினாலே நாங்கள் அடியாராகிச் செல்லுதலே சிறந்த வழியாம். எவ்வாறு செல்லுமிடத்தும், நெறியோ நெடிதாய்த் தோன்றுகிறதே, இதற்கென் செய்யலாம் என்றாலோசிக்கும்பொழுது, “நீளத்தே நின்ற நெறியை அணித்தாக்கும் அஞ்செழுத்து” என்று அஞ்செழுத்தை நினைவூட்டுகின்றார் நக்கீரதேவர். அவ்வுபாயத்தை அனுசரித்து நடந்தால், நீள நின்ற நெறியை அஞ்செழுத்தாற் குறுக்கி, ‘உருவு பல கொண்டுணர்வரிதாய் நிற்கும் ஒருவனொருபால் இருக்கை — மருவினிய பூக்கையிற் கொண்டெப் பொழுதும் பத்தர்கள் வந்திறைஞ்சும் மாக்கயிலை என்னும் மலை’’யை, யாழ்ததையும் வண்டு தேனுண்டு பாடும அழகிய கயிலையை, நெறியிற் கண்டு தருவி தூங்குங் கயிலையை. புனமுற்று நிற்குமவர் எத்தும் இருக்கயிலையை, அளக்க லாகா அளவும் பொருளும் அளக்கலாகா நிலையுந் தோற்றமும் வறப்பினும் வளந்தரும் வண்மையும் தன் குணங்களாக் கொண்டு துலங்குகின்ற பெருங் கயிலையை எளிதில் அடையலாம்.

அடைந்து அங்கே. “போர்த்த களிற்றுரியும் பூண்ட பொறியரவுந் தீர்த்த மகளிருந்த செஞ்சடையும் மூர்த்தி குயிலாய மென்மொழியாள் கூறுயவாறும்” காணலாம். கண்டு அளவளாவ ஆரம்பித்துவிட்டால், அப் பெண்பாகர், தமது இயல்பானது ஆரமுதே போலும இனியராய்ப் புணர்ந்து. உரையும பொருளும் உடலும் உயிரும் விரையும் மலரும்போல விம்மிதமுரையின்றிச் சென்றொரு எங்கும் நிறைந்து நிற்பவராம்’’ என்பதை உணர்த்துவர்.

கயிலையென்பது காளத்தி, கங்கையென்பது பொன் முகரி என்றெழுந்த திருவாக்கின் பிரகாரம் நக்கீரதேவர் காளத்தியிலேயே கயிலையைத் தரிசித்தாராதலினாலே பொன்முகரி சகிதமான காளத்தியம் ஒன்றுபட்டொரு கதிமிலே தோன்றிக்கொண்டேயிருக்கிறது.

காளத்திமிறைவராய்க் கயிலைநாதராய் நிகழும் எம்பெருமானது திருநாமம் அஞ்செழுத்தாம், அதனைச் சோராமல எப்பொழுதும சொல்லட்டுமாம், ஏனெனில் அதுவன்றோ நீளத்தே நின்ற நெறியை அணித்தாக்குவது! அதுமட்டோ!

‘வாயிலே வைக்கு
மனவின் மருந்தாகத்
தீய பிறவி நோய்
தீர்க்குமே—தூயவே
கம்பெருமா தேவியொடு
மன்னு கயிலாயத்

தெம்பெருமான் ஓரஞ்செழுத்து.’’

தாமேற்றிய விளக்கொளியிலே பொருள் பலவற்றுளே இவைகளையும் காண்பிக்கின்றார் நக்கீரதேவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று ஆரம்பம்! இன்று ஆரம்பம்!

# காணிவல் காட்சியும் களியாட்ட விழாவும்

## பரமேஸ்வரக் கல்லூரி முன்றிலில்

மேமீ 14-உ தொடக்கம் 21-ந் உவரை
தினந்தோறும் பிற்பகல் 4 மணி தொடக்கம்

நாநாதேசப் பொருள்களின் காட்சி:

அரசாங்க தொழிற்பகுதியாரின் சுதேசியக் காட்சிகள்! கல்விப்பகுதியாரின் கலைமிளிர் காட்சிகள்! மாகாணத் தலைவரின் உள்ளூர்ப் பொருட்காட்சிகள்! விவசாய இலாகாவின் விளைபொருட் காட்சிகள்! றெயில்வேப்பகுதியின் பிரயாணக் காட்சிகள்!

இவைமட்டுமா?

மெரி-கோ-றவுண்ட், விநோத ராட்டினம், சறுக்கலாட்டம், விமான ஊஞ்சல் முதலிய 20 விளையாட்டுகள்

## அகிலம்புகழும் அற்புதசேர்க்கஸ்

இன்னும்?

சிங்கார கானங்கள்; ஒய்யார நடனங்கள்! சமூகவாழ்வைச் சித்திரிக்கும் சங்கீதக் காட்சிகள்!

பந்தநல்லூர் மீனாட்சி சுந்தரம்பிள்ளையின் பௌத்திரி பரதநாட்டியக் கலையரசி
பந்தநல்லூர் ஜெயலக்ஷ்மியின் பரதநாட்டியக் கச்சேரி ஒரு தனிவிசேஷம்

உலகப்பிரசித்தி பெற்ற கோபிநாத் அவர்களின் பிரதமசிஷ்ன்
சந்திரசேகரனதும் அவர் கோஷ்டியாரினதும் கதாகளி நடனங்கள்

கோகிலகான இசைவாணி **எம். எஸ். சுப்புலக்ஷமியின்**
விசேஷ சங்கீதக்கச்சேரி 29-5-46 புதன்கிழமை நடைபெறும்

(Mis 42 14)



வெற்றியைப் பின்தொடர்ந்து இதோ வந்துவிட்டோம்

## அஜ்மீர் ஜெனரல் அஷ்யூரன்ஸ்
### வீமாக்கொம்பனி லிமிற்றெட்

ஸ்தாபிதம் 1907

எப்போதும் அதிசய சேவையின் அற்புத வெற்றி

| | | |
|---|---|---|
| இப்போதுள்ள பொலிசிகள் ரூபா | 700,00,000—00 | மேற்பட்டது |
| இதுவரை கொடுபட்டதொகை ரூ. | 113,00,000—00 | ,, |
| இப்போதைய இருப்பு ரூபா | 170,00,000—00 | ,, |
| 1944ம்ஆூ வருஷாந்த வருமானம் | 39,45,103—00 | ,, |

ஆயுள், அக்கினி, தொழிலாளர் நஷ்டஈடு, விபத்து
முதலியவற்றிற்கு இன்ஷூர் செய்யப்படும்.

எவருக்கும் தகுதியான குறைந்த கட்டணப் பணம் உடையது
இலங்கையில் சகலபாகங்களிலும் ஏஜென்ஸ் தேவை
நல்ல சம்பளமும் உத்தியோக நிலைபரமும் கொடுக்கப்படும்
விபரங்களுக்குக் கீழ்க்கண்ட விலாசத்துக்கு எழுதவும்

கிளைக் காரியதரிசி, **டொன் கரலிஸ் கட்டிடம்,**
91, முதலாம் குறுக்குத்தெரு,
புறக்கோட்டை, கொழும்பு.

Mis 154 29-11-45—30-11(தி)



## பேர்பெற்ற பேசல் மிஷன் கலிக்கற் ஓடுகள்

உலகப் பிரசித்திபெற்ற, திறமானவையும், நன்மதிப்பு உள்ளவையும், பேசல் மிஷன் கலிக்கற் ஓடுகளே. மிகக் குறைந்த தண்ணீரை உறுஞ்சுவன. கடைகளில் விலைப் படும் பலதினிசு ஓடுகளையும் நிறுத்துப்பார்த்துத் தண்ணீருள் நனையவிட்டுபின்னும் நிறுத்து எது கூடிய தண்ணீரை இழுக்குமெனப் பரிசோதித்துப் பாருங்கள். தற் கால நிலைமைக்கும். தேவைகளுக்கும் ஏற்ற ஒரு புதுமாதிரி இவ்வோடுகள் செருகு விழிம்பும், இரட்டைப் பீலியும் உள்ளனவாய்ச் செய்யபபட்டு இக்காலத்தில் அதிக மாய் உபயோகிக்கப்படுகின்றன. கீழைத் தேசத்தில் விலைப்படும் ஓடுகளுள் இவை களே முதன்மை பெற்றன. வாங்கத் தீர்மானிக்குமுன் இவ்வோடுகளை ஒருதரம் பாருங்கள், கவனியுங்கள். மற்றைய ஓடுகளில் ஏமாந்து நட்டப்படாதீர்கள்.

வேறு சாதி ஓடுகளைப்போல வழக்கமான தனிப் பீலி ஓடும்
இங்கே பெற்றுக்கொள்ளலாம்.

வில்லியம் மேதர் அன்சன்ஸ், தனி ஏஜன்ட்
(செ) 1888-ம் ஆண்டு முதல்.

Misc 250—19-3-46—19-9-46)



## யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி

1918-ம் ஆூ ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா
**134,3670**
**100** ரூபா விகிதமான **8000** பங்குகள்

பங்குப்பணங் கட்டுமுறை.

மாசமொன்று 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப் பற்றுவரவு

எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானல் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங் கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்க வும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியாநோட்டு வட்டத்திற்கு மாற்றிக்கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 9 விகிதம் அறவிடப்படும். (இடுவைத்தவர்கள்) முதலையும் பாகம்பாகமாகக்கொடுக்கலாம். இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்

S. கனகசபை
சிறாப்பர்.

Y 12 20-11-45—20-11-46 (தி)


## வியாபாரத்திற்கழகு
## விளம்பரஞ்செய்தல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக அரசியல் நிலை

### சேர்ச்சிலின் பகற்கனவு

பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தில் ஆதித்தன் அஸ்தமிப்பதில்லை. அத்தகைய விஸ்திரணமுடையது. அதனை அமைக்க எம்முன்னோர் எத்தகைய கஷ்டங்களை அநுபவித்தனர். அத்தகைய ஓர் ஏகாதிபத்தியத்தை அழிப்பதற்கு நான் பிரதம மந்திரியாக வரவில்லை; எம் கைப்பட்டிருப்பது எதுவோ, அதனைக் கடைசிவரை எம்வசம் வைத்திருப்போம் என்று மிஸ்ரர் சேர்ச்சில் தாம் பிரதம மந்திரியாக இருந்த காலத்தில் பெருமிதத்துடன் கூறியது அநேகருக்கு இன்னும் ஞாபகமிருக்கலாம். யுத்த தந்திரத்திற் கைதேர்ந்தவரான மிஸ்ரர் சேர்ச்சில் அப்படி அக்காலத்திற் கூறியபோது உலகம் சுதந்திரப் பாதையில் எவ்வளவு தூரம் முன்னேறிப்போகிறது என்பதை உணராதுவிட்டார். பாவம் அதன் பயனாக அவர் கண்முன்னலேயே இந்தப் பரந்த பிரிட்டிஷ் சாம்ராஜ்யம்—பிரிட்டிஷ வீரரின் தியாகத்தால் அமைக்கப்பட்ட சாம்ராஜ்யம் — இன்று தட்டுத்தடுமாறிச் சிரழிந்து ஏகாதிபத்தியம் என்ற பேச்சே இல்லாமல் வருவது எவ்வளவு பரிதாபம்!

○

### "வெளியே போ"

எங்கு பார்த்தாலும் "வெள்ளையரே வெளியே போ" என்பதே இப்போது அடிமை நாடுகளிற் பேச்சாக இருக்கிறது. இந்தோ சீனத்தில் பிரான்சிய ஆதிக்கம் கவிழ்ந்துவிடத் தேசீய அரசாங்கம் ஸ்தாபிக்கப்படலாயிற்று. இந்தனேஷிய மக்கள் கிளம்பி தம் சுதந்திர அரசாங்கத்தை ஸ்தாபித்தனர். ஒல்லாந்தர் பிரிட்டிஷ் ஆயுத உதவியுடன் சுதந்திரக் கிளர்ச்சியை நசுக்க முயற்சி செய்தனர். அம்முயற்சி பிரதிகூலமடையவே: செஞ்சினுல் மிஞ்சு, மிஞ்சினுல் கெஞ்சு என்ற ஏகாதிபத்திய சம்பிரதாயப்படி, இந்தனேஷியருடன் சமரசம் பேசினர். அவர்களின் பிரதிநிதிகள் சிலரை ஒல்லாந்துக்கு அழைத்துச்சென்று மகாநாட்டிற் பேசினர். ஈற்றில் ஓர் முடிவும் ஏற்படவில்லை. ஒல்லாந்தர் தமது ஏகாதிபத்தியத்தைக் கைவிட விரும்பவில்லை; இந்தனேஷிய மக்கள் தாம் சம்பாதித்த சுதந்திரத்தை மீண்டும் இழந்து ஒல்லாந்தர்க்கு அடிமையாக இருக்க விரும்பவில்லை. இங்கிலையில் இந்தனேஷியர் அமைத்த சுதந்திர அரசாங்கம் ஜரூராக வேலை செய்கிறது. ஒல்லாந்தர் இனி என்செய்வர் என்பதை இருந்து பார்க்கவேண்டும்

○

### எகிப்திலும் 'வெளியே போ"

1860-ம் ஆண்டில் சுவெஸ் கால்வாய் திறக்கப்பட்டது கீழை நாட்டு ஏகாதிபத்தியத்தைக் காப்பாற்றுவதற்கு சூயஸ் கால்வாய்ப் பாதுகாப்பு இங்கிலாந்துக்குப் பிரதானமானது. சூயஸ் கால்வாயைக் காப்பதற்காக, இங்கிலாந்து எகிப்தில் நுழைந்து மெல்லமெல்லவாக அந்நாட்டிற் பிரித்தாளும் தந்திரத்தைக் கையாடி ஈற்றில் அத்தேசத்தை அடிமைகொண்டது; ஆனல், எகிப்திய மக்கள் இஸ்லாமியர். சுதந்திரப் பிரியர், அவர்கள் செய்த கிளர்ச்சிகளின் பயனாக 1914ம் ஆண்டில் அற்ப சுதந்திரம் எகிப்துக்கு நல்கப்பட்டது பின்னர் லட்சக்கணக்கான எகிப்தியர் தம் இரத்தத்தைச் சிந்தி 1922-ம் ஆண்டில் இன்னும் மேலதிகமான சுதந்திரத்தை எகிப்துக்குப் பெற்றுக்கொடுத்து அதனை முடியாட்சி நாடாக்கினர். இருந்தபோதிலும் அங்கே பிரிட்டிஷ் இராணுவம் தற்பாதுகாப்புக்காக இருக்க எகிப்து அநுமதித்தது. ஆனல் 1936-ம் ஆண்டில் ஆங்கில-எகிப்திய ஒப்பந்தம் ஒன்று உண்டானது. அதன்படி பிரிட்டிஷ் இராணுவம்வகித்திருந்த விசேஷசெல்வாக்கு குறையலாயிற்று. இரண்டாம் உலக யுத்தம் மூள, 1940-ம் ஆண்டில் ஜெர்மனியர் எகிப்தின் எல்லைப்புறத்துக்குப் படையெடுத்து வந்தனர். இதன் பயனாக, எகிப்து யுத்தகளமாக மாற, பெருந்தொகையான பிரிட்டிஷ் படைகள் அங்கு இறக்குமதி செய்யப்பட்டன, 1942-ம் ஆண்டுடன், எகிப்திலிருந்து ஜெர்மன் - இத்தலியப் படைகள் விரட்டப்பட்டன. ஆனல் வேலை முடிந்ததும் பிரிட்டிஷ் படைகள் வெளியேறவில்லை. அவை எகிப்திலே சாசுவதமாக நிலைகொள்ள ஆரம்பித்தன. இதனை எகிப்தியர்கள் — விசேஷமாக மாணவர்கள் ஆட்சேபித்தனர். பல ஆர்ப்பாட்டங்கள் நிகழ்த்தினர். பல கொலைகள் நிகழ்ந்தன. இதனல் எகிப்தியர்க்கும் ஆங்கிலேயர்க்குமிடையே மனக்கசப்பும் பரஸ்பர சந்தேகமும் ஏற்பட்டன. எகிப்துக்கு இஸ்லாமிய உலகம் முழுவதும் ஆதரவு அளித்தது. நிலைமை மோசமாகி வருவதை இங்கிலாந்து உணர்ந்தது. தன் படைகளை அப்புறப்படுத்துவது என்று தீர்மானித்தது. பாராளுமன்றத்தில் இப்பிரச்னை விவாதிக்கப்பட்டபோது ஏகாதிபத்திய வெறிபிடித்த மிஸ்ரர் சேர்ச்சில், "இவ்வளவு காலமாக நாம் பாடுபட்டு ஸ்தாபித்த ஏகாதிபத்தியத்தைக் குலைக்க முடிவு செய்யலாமா என்று ஓர் பாட்டம் ஒப்பாரியும்போட்டார் ஆனல் காரியம்மிஞ்சிவிட்டது. பிரிட்டிஷ் இராணுவம் வெளியேறியே தீரவேண்டும். எகிப்தின் நல்லெண்ணத்தைப் பெற்று, அதன் மூலமாக சூயஸ் கால்வாயில் தனது அதிகாரத்தை வைத்திருக்க இங்கிலாந்து தீர்மானித்திருக்கிறது; சுதந்திரத்தின் வேகத்தை யார்தான் தடுக்கமுடியும்?

## இந்திய அரசியல்

2 ம் பக்கத் தொடர்ச்சி

மத்திய அரசாங்கத்தை நிறுவி, அதன் மூலமாக இந்தியர் கைக்கு அதிகாரத்தை மாற்ற பிரிட்டிஷ் அரசினர் தயங்கமாட்டார்கள் என விஷயமறிந்த வட்டாரங்களில் பேசிக் கொள்ளப்படுகிறது.

●

### அடுத்த காங்கிரஸ் தலைவர்

பண்டிதர் ஜவஹர்லால் நேரு, அடுத்த காங்கிரஸ் தலைவராகப் போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார் என்பதைப் பிரிட்டிஷ் அரசினர் கூர்ந்து அவதானிக்க வேண்டும்: நேரு மிதவாதியல்லர்; அதிதீவிர தேசிய வீரர். வாலிபரின் ஒப்புயர்வற்ற தலைவர்; பிரிட்டிஷார் அதிகாரத்தை இந்தியர் கைக்கு மாற்றுவிட்டால், அடுத்த போராட்டம் எப்படிப் பயங்கரமானதாக விருக்கும் என்பதைப் பண்டிதநேரு அவர்கள் தலைவரானதிலிருந்து ஊகித்துக்கொள்ள முடியும். இதுகாறும் இந்திய இராணுவம, பொலிஸ் பகுதி, கடற்படை என்பன சுதந்திரப்போராட்டத்திற் பங்கெடுக்கவில்லை. இனியும் அப்படி நடக்குமோ என்பது சந்தேகமே. இதனைப் பிரிட்டிஷ் அரசாங்கம் உணர்ந்துதான் இருக்கும்.

## விவாகஞ் செய்யச் சுதந்திரம் வேண்டும்

பொலிஸ்பகுதியில் உள்ள பொலிசார், சார்ஜன்ற் வகுப்பினர் என்னும் இவர்கள் விவாகம் செய்ய வேண்டுமானல், ஏற்கெனவே தங்கள் மேலதிகாரிகளுக்கெழுதி அவர்கள் அநுமதியைப் பெறவேண்டும் என்னும் ஓர் பிரமாணம் 1937ம் ஆண்டு தொடக்கம் அமுலில் இருந்து வருகிறது. இதனை நீக்கவேண்டும் என்று பொலிஸ் சங்கம், பொலிஸ்பகுதித் தலைவர்க்கு ஓர் மனுவைச் சமர்ப்பித்து இருக்கிறது.

# கந்தபுராணக் கவி நுட்பம்

## திருவவதாரப் படலம்

வித்துவசிரோமணி ந. ச. பொன்னம்பலப்பிள்ளை அவர்கள் வாய்க்கேட்டெழுதப்பெற்ற பிரதியிலிருந்து எடுத்த அரும் பெருங் குறிப்புக்கள் இப் [ ] பகரக் குறியீட்டுடன் வெளியிடப்பட்டுள்ளன

ஆவதோர் காலையீச னறுமுக நுதற்கண் மாட்டே
மூவிரு பொறிகள் தோன்றி முளரியான் முதலாவுள்ளோர்
ஏவரு மணுகல்செல்லா வெல்லைதீர் வெம்மைத் தாகிப்
பூவுல கண்டமுற்றும் போள்ளெனப் பராய வன்றே

ஆவதோர் காலை-இறைவருடைய நெற்றிக்கண்கள்தோறும் தீப்பொறி ஒவ்வொன்று அமைந்தபோது; முளரியான்-தாமரைப்பூவி லுறைகின்றபிரமதேவர்; அணுகல் செல்லா—சமீபித்துச் செல்லமுடியாத,எல்லைதீர்-அளவுகடந்த, வெம்மைத்தாகி-வெப்பத்தை யுடையதாகி, பூவுல கண்டமுற்றும்-பூவுலகமாகிய அண்டம் முழுவதும், பராய-பரவியன: அன்றென்பது அசை: சிருட்டிகர்த்தாவாகிய பிரமதேவர் முதலாம் தேவர்களனைவரும் சமீபத்திற் செல்லமுடியாத வெம்மையோடு கூடிய பொறிகளாதலின் "எல்லைதீர் வெம்மைத்தாகி" எனப்பட்டது, வரம்பிலா ஆற்றல்பெற்ற சூரபன்மன் முதலாம் அசுரர்களைச் சம்மாரஞ்செய்தற்கான அறுமுகக்கடவுள்தோன்றுதற்குஏதுவான தீப்பொறிகளாதலின் இத்துணை வெம்மையோடு தோன்றிப் பரவியனவென்க. பொறிகள் வெம்மைத்தாகி யென்பது பன்மை யொருமை மயக்கம். [45]

மாதண்டம் குலவுநேமி வால்வளை வயிர வோள்வள்
கோதண்டம் பரித்தோன் வேதாக் குறித்துணர் வரியசோதி
வேதண்டம் பரவிற்றென்ன மேதினி சூழ்ந்து விண்போய்
மூதண்டங் காறுஞ்சேன்ற முதல்வன்கண் ணுதலிற் சேந்தீ

மேலான கதாயுதர், திகழுகின்ற சக்கரம், வெள்ளிய சங்கு, கூரிய வாள், சிறந்த வில்லு என்னும் பஞ்சாயுதங்களையுங் கொண்ட திருமாலும் பிரமாவும் அடியையும் முடியையும் தேடியறிய நோக்கங்கொண்டும தேடிக் காண்டற்கரியதாகிய சோதிமலை எங்கும் பரந்தவாறு, முழுமுதற் கடவுளாகியபரமசிவனுடைய நெற்றிக்கண்களிற் பிறந்த செவ்விய நெருப்புப்பொறிகள் பூவுலகமெங்குஞ் சூழ்ந்து பரந்து (பின்) மேலண்டம்வரையிற சென்றதென்பது கருத்து.

காவற்கடவுளாகிய நாராயணமூர்த்தி பரித்ததாகிய தண்டம் சூரபன்மன் சிங்கன் தாரகன் என்னும் மூவர் கொண்ட தண்டங்களையொழிய ஏனைய தண்டங்களெவற்றுள்ளும் வலிமிக்கதாதலின் மாதண்டமெனவும், அவருடைய ஆஞ்ஞா சக்கரமாகிய சுதரிசனமென்னும் நேமியும் மேலே கூறியவாறு ஏனையர் கொண்டுள்ள சக்கரப் படைகளைக்காட்டிலும் வலியுடையதாய் எவ்வுலகுஞ் செல்லும்ஆற்றலுடையதாய் விளங்குவதனல் குலவுநேமியெனவும், சங்கும் ஏனையர் கொண்ட வெற்றிச்சங்கைக் காட்டிலும் சிறந்தது தூயதுமானதால் வால்வளையெனவும், வாட்படையும் அத் தன்மைத்தாதலின் வயிரவொள்வாள் எனவும், கோதண்டம் என்பது வில்லைக்குறிக்குஞ் சொல்லெனினும் முதன்மையைத் தெரிவிக்கும் கோ என்னும் மொழி முதலிற் பொருந்தவும், விஷ்ணுவின் தசாவதாரத்துள் ஒரு அவதாரமாக விளங்கிய தசரதராமர் இராவணன் முதலாம் அரக்கரை வதைத்தற்குக் கொண்டுள்ள வில்லின் பெயர் கோதண்டமாதலின் இவற்றைக் குறிப்பாலுணர்த்தும்வண்ணம் கோதண்டம் எனவும் அடைகள் தந்தும் உயர்ச்சி கொடுத்தும் ஆசாரிய சுவாமிகள் கூறியுள்ள நுட்பம் அவதானிக்கற்பாலதென்க: திருமால் கரத்திற் பரித்த வில் சார்ங்கமெனப்படும். ஆயினும் மெய்யடியார்க்கு அவனருளாலே சோதி வேதண்டம் புலப்படுமேயொழிய, பஞ்சாயுதங்களையும் பரித்து அகந்தையொடு நின்ற அரிக்கும் பிரமனுக்கும் அகப்படாச் சோதிமலையென்பார் மாதண்டம்...கோதண்டம் பரித்தோன் வேதாக்குறித் துணர்வரிய சோதிவேதண்டம்...." என்றார். குறித்தென்பது அடியையும் முடியையுந் தேடிக் காண்போமென இருவரும் தருக்குடன் நிச்சயித்தமையை; சோதிவே தண்டம்-அக்கினிப் பிழம்பாகிய மலை: அரிபிரமர் கொண்ட இகலையும் அகங்காரத்தையும் ஒழிக்கும்பொருட்டு அக்காலத்திற் றேன்றிய அக்கினிமலை வெம்மையை எங்கும் பரப்பியதெனினும் எவ்வுயிர்க்கும் இடர் செய்யாது பின்னர் அரிபிரமர் முதலாம் அனைவர்க்கும் இதஞ் செய்தவாறு, இத் தீப்பொறிகளும், வெம்மையைப் பரப்பி, உயிர்கட்கு அச்சத்தை யூட்டியவேனும், எவ்வுயிரையும் தகித்தலின்றிப் பின்னர் எல்லாவுயிர்க்கும் அறுமுகக்கடவுளாய் அருள்செய்யுமாதலின் "அரிய சோதிவேதண்டம் பரவிற்றென்ன...மூதண்டங் காறுஞ்சென்ற" என்று அதனை இதற்கொப்பாகக் கூறினர்; இத் திருவிருத்தத்தில் எதுகை வைப்புப் பாராட்டத்தக்கதாம். (46)

## சிங்களத் தலைவர்களின் ஒற்றுமைப் பல்லவி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ணத்தில் வீரவில, நிடியகம நாடுகளில் எத்தனைகோடி ரூபா? அநுராதபுரத்தில் எத்தனைகோடி ரூபா வைவாரிவாரிச் சிங்கள மந்திரிகள் இறைத்தனர் என்பதை ஸ்ரீமான் நடேசபிள்ளை அறியமாட்டாரா? இவைமாத்திரமா? விவசாய விருத்திக்கென்றும், நீர்ப்பாய்ச்சல் வசதிக்கென்றும், கைத்தொழில் விருத்திக்கென்றும் கோடிக்கணக்கில் ரூபாய்களை வாரிவாரி இறைத்ததோடு அமையாது, யுத்த காலத்தில் அவசிய பாதுகாப்புச் செலவுக்கென எத்தனைகோடி ரூபா தென் இலங்கையிற் செலவழிக்கப்பட்டது? இதற்குக் கணக்கு இல்லை. தென் இலங்கையில் சிங்கள மக்களுக்காக செலவழிக்கப்பட்ட பணத்துடன் ஒத்துப் பார்க்குமளவில், யாழ்ப்பாணத்தில் செலவழிந்தது மிகமிக அற்பம் என்பதை ஸ்ரீ நடேசபிள்ளை நன்கு உணர்வாராக.


## தேவை

ஒரு நேரத் தோட்டப் பாடசாலைக்கு, அநுபவம் வாய்ந்த, அங்கீகரிக்கப்பட்ட ஓர் ஆசிரியர் தேவை. அரசாங்கப் பிரமாணப்படி வேதனமும் யுத்தகால உபகாரப் பணமும், குடியிருக்க வீடும் கொடுக்கப்படும்.

Superintendant
Upper Balangoda
Balangoda

Mis 41. 10-5-46—14-5-46


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடிமைநாடுகளிற் பட்டினிக்கொடுமை

## கோதுமையை விறகாக எரிக்கிறார்கள்! ஆனால் இங்கே பட்டினியால் மரணம்!

—:—

### அந்நியர் உதவியை நம்புதல்ஆகாது! நாமே நமக்கு உதவி!

(ஸ்ரீ S. N. அகர்வாலா)

[மேல் நாடுகளின் சுதந்திரத்திற்காக நாம் எம் இரத்தத்தைச் சிந்தினோம். அதற்காக அவர்கள் செய்யும் கைம்மாறு என்ன? அவர்களை நம்பி இனியும் இருக்க வருமா? என்னும் இன்னோரன்னவற்றை ஆசிரியர் இக்கட்டுரையில் விளக்குகிறார்.]

II

செப்படி எல்லாம் ஏகாதிபத்திய நாடுகள் இங்கிலாந்துக்கே தம் தேவைக்கு மிஞ்சிய உணவுப் பொருள்களை அனுப்புவதில் இருந்து, இங்கிலாந்தில் உணவுப்பஞ்சம் நிகழுகின்றதா எனச் சிலர் வினவக்கூடும். அப்படியாக இங்கிலாந்திலே உணவுப்பஞ்சம் உண்டா? அங்குள்ள ஆங்கில மக்கள் பட்டினி கிடக்கின்றார்களா? உண்மையைக் கூறுமிடத்து, இங்கிலாந்திலே உணவுப்பஞ்சம் இல்லை. நேர்மாறாக யுத்தத்துக்குமுந்திய காலத்திற்குமுன் உண்ட உணவிலும்பார்க்க, அதிக உணவை ஆங்கில மக்கள் இன்று உண்ணுகிறார்கள். யுத்தகாலக் கஷ்டங்களைச் சகிப்பதற்காக ஆங்கில மக்களுக்கு, விசேஷ உணவு அளிக்கப்பட்டது உலகெங்கும் பட்டினியும், பஞ்சமும் மக்களைப் பீடித்து வாட்டிய காலத்திலே ஆங்கிலமக்கள் வயிறார உண்டனர். அந்தச் சலாக்கியத்தை அவர்கள் இப்போது கைவிடப் பின்னிற்கின்றனர். சாம்ராஜ்ய நாடுகள் எல்லாம் தங்கள் உணவுப் பொருள்களை இங்கிலாந்துக்கு அனுப்புவதன் மூலகாரணம் இதுதான். அடிமை நாட்டு மக்கள் எப்படிப் பட்டினி கிடந்தாலென்ன? வங்காளத்தில் லட்சக் கணக்கானோர் மடிந்தால் என்ன? கோடிக் கணக்கானோர் மெலிந்தால் என்ன? இவற்றைச் சிந்திப்பதற்குச் சாம்ராஜ்ய நாடுகள் தயாராக இல்லை, நாம் அன்று யாருடைய சுதந்திரத்துக்காக யாருடைய சுபீட்சத்துக்காக, எம் வாலிபரில் லட்சக்கணக்கானோரை யுத்தகளத்திற் பறிகொடுத்தோமோ, அவர்கள் இன்று நன்றி மறந்து எம் பரிதாப நிலையைக் கண்டும் காணாதார்போலக் கருமம் ஆற்றுகின்றனர். எனவே சாம்ராஜ்ய நாடுகள் மூலமாக நாம் ஏதும் உதவி பெற நினைத்தால் பகற்கனவாக முடியும்.

* * *

பிரிட்டிஷ் சாம்ராஜ்ய நாடுகளின் நிலைமை இப்படி என்றால், ஏனைய அந்நிய நாடுகளைப்பற்றிச் சொல்லவும் வேண்டுமா? அமெரிக்காவைச் சேர்ந்த ஆர்ஜென்ரைன் நாட்டிலே பெருந்தொகையான கோதுமை, தேவைக்கு மிஞ்சி இருக்கிறது? இந்தக் கோதுமையை ஆர்ஜென்ரின அரசாங்கம் என்ன செய்கிறது. பட்டினியால் தவிக்கும் நாடுகளுக்கு அனுப்புகிறதா? இல்லை! இல்லை! பின் என்ன செய்கிறது. மிதமிஞ்சிய கோதுமையை புகைரத என்சின்களிற் போட்டு விறகாக எரிக்கிறது!

* * *

அமெரிக்கா எங்கள் அரற்றலைக் கேட்டது. எங்கள் ஓலத்துக்குச் செவி சாய்ப்பதுபோல் நடித்தது. ஆனால் நாஸி ஜெர்மனியிடமிருந்து விடுதலைபெற்ற ஐரோப்பாவின் பட்டினியைத் தீர்ப்பதே அமெரிக்காவின் பெருங் கவலையாக இருக்கிறது. கறுப்பர்களாகிய இந்தியர்களைப்பற்றிச் சிந்திப்பார் எவர்? இது கிடக்க, உலகப் பஞ்ச நிவாரணத்துக்கெனச் சர்வதேச சங்கம் ஓர் ஸ்தாபனத்தை நிறுவியிருக்கிறதல்லவா? அந்த ஸ்தாபனத்தில் அங்கத்துவம் வகிப்பன ஒருசில வல்லரசுகளே! இவற்றில் அமெரிக்காவும் இங்கிலாந்தும் எம் விஷயத்தில் இத்தகைய மனப்பான்மை கொண்டிருக்கும்போது, மற்றும் வல்லரசுகளைப்பற்றிச் சொல்லவும் வேண்டுமா? இந்த ஸ்தாபனம் ஐரோப்பாவுக்கு எவ்வளவோ உதவிகளைச் செய்துளது. ஆனால், இந்த அடிமை இந்தியாவுக்கு அது இற்றைவரை செய்த நன்மைதான் என்ன?

* * *

அற்ற குளத்தில் அறுநீர்ப் பறவைபோல விட்டு விலகும் அந்நிய நாடுகளின் தயவில் நாம் ஒருபோதும் தங்கிநிற்கவொண்ணாது. நாம் எல்லோரும் ஒன்றுசேரவேண்டும். எமக்குள்ளேயிருக்கும் அபிப்பிராய பேதங்களை நாம் ஒதுக்கி, இந்த நெருக்கடியான சந்தர்ப்பத்தில் ஒற்றுமை பூணவேண்டும்; எம்நாட்டு மக்களின் பஞ்சத்தை நிவிர்த்தியாக்க நாமே மார்க்கம் தேடல்வேண்டும்; பிறர் தயவை ஒருபோதும் நாடவொண்ணாது


## பசந்த லேகியம்

இதனால் மூலச்சூடு, இருமல் பித்தப் பாண்டு, குன்மவாய்வு, நெஞ்செரிவு, கைகால் வலி, அசதி, அஜீரணம், வயிற்றுப் பொருமல், புளித்த ஏப்பம், மலச் சிக்கல், பீனிசம், பார்வைக் குறைவு, வெள்ளை, சூலை, சந்து வாய்வு, பிரமேகம் முதலிய வியாதிகள் சூரியனைக் கண்ட பனிபோல் நீங்கும், இந்திரியம் கட்டுப்பட்டு தேக புஷ்டி, வஜீகரம், பலம் முதலானவை உண்டாகும்.

ஸ்திரீகளுக்குண்டாகும் பிரதானமான வியாதியாகிய சூதகக்கட்டு, பிரசவத்தால் உண்டாகும் பல கொடிய உபத்திரவங்கள் தீர்ந்து மாதவிடாய் குறைந்து அல்லது அதிகமாய்க்காணுதலால்நேரிடும் பல நோய்களும் தீர்ந்து, தேகத்துக்குப்பலம் உண்டாக்கும்.

ஒருறுத்தல் விலை ரூபா 25
அரைறுத்தலுக்கு ரூபா 12-50
கால்றுத்தல் ரூபா 6-25

விலாசம்:

**க. ஆறுமுகம்பிள்ளை**

நி. 156, செக்கடித்தெரு கொழும்பு

Mis.25 23-4 46 to 22-3-47)



## புகையிலை தேவை

*

பெருந்தொகையில் யாழ்ப்பாணப் புகையிலை தரக்கூடியவர்கள், என்ன விலையில், மாதம் எவ்வளவு, தரமுடியும் என்பதைப் பின்வரும் விலாசதாருக்கு எழுதுக: வங்கி மூலமாக உரக்கம் கொடுக்கப்படும்.

●

**T. N. ரத்தினம்,**

82, அம்பாங்தெரு,

கொல்லம்பூர், மலேயா.

Mis 9 9-4—13-5


## கந்தபுராணம்

முதலாம்பக்கத் தொடர்ச்சி

னையே ஆசிரியர், "தூசுடுத்திலம் என்றொர் துகில்புனைந்து ஆசையோடு சென்று அன்னதும் விட்டியே ஊசல் போன்றனர் ஒண்டொடி மார்சிலர்" எனப்பாடினார்,

பிரம விட்டுணுக்கள் தங்கள் தங்களிடத்து எழுந்த அகங்கார மமகாரத் தடிப்பினால் தனித்தனி தாமே பரம்பொருள் எனவாதாடுகின்றனர். அந்தச்சமயத்தில் எங்கள் ஆசாரிய சுவாமிகள் பிரமன் வாயில் முதல் அகங்காரத்தையும் பின்னர் மமகாரத்தையும்யிட்டு செய்யுட்கள் இயற்றியுள்ளார்.

ஆதிநான் உருவுநான் அருவுநான் இருளுநான்
சோதிநான் அத்தன்நான் தூயன்நான் மாயன்நான்
யாதும்நான்பூதம்நான்யாவும்நான்சங்கரன்
பாதிநான் அவனும்நான் பரமெனும் பொருளும்நான்

ஈண்டு நான் என்னும் அகங்காரத்தை உணர்த்தும் சொல் பன்முறை வந்து பிரமனுடைய அகங்காரத்தை உணர்த்துகின்றது.

கச்சியப்ப சிவாசாரியர் தவத்தின் பெருமையை ஈண்டு எடுத்துக்காட்டியுள்ளார்

தவத்தினில்மிக்கதொன்றில்லைதாவில்சீர்த்
தவம்தனை நேர்வது தானுமில்லையால்
தவத்தினில்அரிய தொன்றில்லைசாற்றிடில்
தவம்தனக் கொப்பது தவமதாகுமே

எனத் தவத்தின் பெருமையைக் கந்த புராண நூலுடையார் கூறியுள்ளார். கந்தபுராணத்தில் பெரும்பேறு பெற்றோர்கள் எல்லோரும் தவத்தின் மூலமாகவே பெறுகின்றார்கள். மலையரசன் கடுந்தவம் புரிந்து பார்வதிதேவியைப் பெறுதலும், பார்வதி தேவியும் தவம்புரிந்து இறைவனை அடைதலும் சூரபதுமுகன் தவம்புரிந்து பல போகங்களைப் பெற்று முடிவில் முருகன் திருப்பதத்தை அடைதலும் தவத்தின் பெருமைக்குச் சிறந்த எடுத்துக் காட்டுகளாம்.

தவம் செய்வோர் இறைவனையே தியானிப்பவராகி முயறல்வேண்டும் தம்முடைய ஒழுக்கத்தில் நின்றும் சிறிது தவறினும் தவத்தினாலாய பெருமையெல்லாம் குன்றப்பெற்றவராவர். தவம்புரிந்த காசிப முனிவர் மாயையை விரும்பியதால், பல்காலம் நோற்றுப்பெற்ற பயனை இழந்தார். "தீதிவண் இழைத்தனை தீரத் தொன்மைபோல் நீதவம் புரிதி" எனப் பிரமன் காசிப முனிவருக்குக் கூறுவதாலும் அறியலாம். பிறவுயிர்களைக் கொன்று யாகம் செய்தால் இறைவன் தோன்றவேமாட்டான். தன் உடலுக்கு வரும் துன்பத்தை தாங்குதலும் பிறவுயிருக்குத் துன்பம் செய்யாமையுமே தவமாம் "உற்றநோய் நோன்றல் உயிர்க்கு உறுகண் செய்யாமை—அற்றே தவத்திற் குரு" என வள்ளுவரும் ஆணை தந்துள்ளார். சூரபதுமன் பல்லுயிர்களைக் கொன்று பல யுகங்களாகத் தவஞ் செய்தும் இறைவன் வந்தானல்லன். "கண்ணுதற்பரனருள்செயாத் தன்மையைக் கருத்தில், எண்ணியிச்செயற் குறுவனே சிவனென விசையா, பண்ணுமத்தொழில் பின்னவர் தங்கள்பாற் பணித்து, விண்ணகத்தின்மீச் சென்றனன் கடவுளர் வெருவ" எனப் புராணமுடையார் கூறுவதாலும் அறியலாம் பிறவுயிர்களைக்கொன்று யாகம் செய்தால் இறைவன் தோன்றவே மாட்டான் என்பதை "இச்செயற் சுறுவனே சிவனென விசையா" என்றார். சூரனும்தன்னுடலத்தை வெட்டி யாகதீயிற் சொரிந்து தனக்கு உற்ற நோயை நோற்றபின்பே இறைவன் தோன்றியருளினன்.

இனி, இக் காவியத்தில் ஆற்றொழுக்காகச் செல்லும் கவிப்போக்கும் படலங்களும் காண்டங்களும் ஒன்றன்பின் ஒன்றாகத் தொடர்புடையனவாக அமையும் அமைப்பும், சந்தர்ப்பத்திற்கு ஏற்பச் செல்லும் அவர்நடையின் வன்மை மென்மைகளும், சமானம் இல்லாத உவமைகளும், பிற புலவரால் நினைக்க முடியாத கற்பனைகளும் கச்சியப்பரைத்தலைசிறந்த புலவரென மதிக்கச் செய்கின்றன.

காப்பியங்களில் யாறு மலை நாடு நகர் முதலியவற்றின் வருணனைகள் சிறப்பாக அமைந்திருக்கும். கச்சியப்பர் நந்திமலையையும் பாலியாற்றையும் மிகவும் அழகாக வருணிக்கின்றார். திருமால் துயிலும் பாற்கடல் போல் வெண்மையான முகில்கள் கடலிற் படிந்து நீரை உட்கொண்டு கடல்போற் கருவண்ண முடையனவாகித் திரும்புகின்றன, வந்து செந்நிறம் உடைய மலையின்மேற் படிகின்றன. இக்காட்சி இறைவன்மீது என்றும் பிரியாத அன்புடைய கச்சியப்பருக்குச் சிவக்காட்சியாகத் தோன்றுகின்றது. "சுந்தர வயிரவத் தோன்றல் மீமிசை, கந்தடு களிற்றுரி கவைஇய காட்சிபோல்" என்கின்றார். செக்கர் வானம்போல் சிறந்த மேனியையுடைய வயிரவக் கடவுள் யானையைக் கொன்று அதன் கரிய தோலை மேனியில் தரித்துநின்ற வீரக் கோலத்தையே கருமுகில்கள் படிந்த செந்நிறமான நந்திமலை நினைப்பூட்டுகின்றது. படிந்த கருமுகில்கள் மெல்லெனவே நந்திமலையின் சிகரத்தில் நீரைச் சொரிகின்றன. பிறிதொரு சிவக்கோலம் தோன்றுகின்றது. நந்திமலை சிவலிங்கமாக, கருமுகில்கள் கண்ணப்ப நாயனாராக மாறுகின்றது: கரைபுரண்டோடும் அன்பினாற் கண்ணப்ப நாயனார் தம் வாய் நிறைய நீரை உட்கொண்டு, அதனால் இறைவனுக்கு அபிடேகம செய்ததையே மலைமீது மழை பொழிதலை உணர்த்துகின்றது "வேட்டுவக்குலத் திண்ணனார்மஞ்சனம் விமலற் காட்டுகின்றதோர் தனிச்செயல் போன்றுளதன்றே" திண்ணனார் செயலைக் கண்டுத் தனிச்செயல் என விசேடித்தது உற்று நோக்கற்பாலது. (வரும்)


# தந்தரோகசஞ்சீவி

கந்தசாமி வைத்தியர்

## சந்தனுதித் தயிலம்

ஒரு கிழமைக்கு வைக்கக்கூடிய
ஒரு அவுன்சு தயிலம் விலை ரூ. 2

ஒவ்வொருநாளும் ஒருசதவீதம் வைத்துக் கடைசியன்று சீயாக்காய் வெந்தயம் அவித்துத் தப்பி வெந்நீரில் தோய்வது. பத்தியம்: புகையிலையாகாது ஆடினபல்லு உடனே இறுகும், முரசு வளரும், வாய்ப்புண் வீக்கம் தொண்டைப்புண் கம்மல் இருமல் கபாலம் பீனிசம் மாற்றும் உத்தரவாதமுடையது. ஒரு தடவை வேண்டிப் பாவித்து அறியலாம்.

நெருப்புச்சூடு முதல் எந்த வேக்காட்டிற்கும் பூச உடனே வேதனை தணியும். வீ. பீ பீ யிலும் அனுப்புவோம்.

சீசா மூலிய செலவு வேறு:

விலாசம்:

ஆயுள்வேத சிவசோதி
மெடிக்கல் ஹோல்
வல்வெட்டித்துறை.

வல்வை நரசிங்க வைரவாலயத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

Mis 27 26-4 46—25-10-46


வான்முகில வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்

Printed and Published by PANDIT V. T. SAMBANDHAN, residing at Vannarponnai West, Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabha, Jaffna, at their Press, the Saiva Prakasa Press Vannarponnai, Jaffna, on Tuesdav May. 14. 1946.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org